# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.73/2020 | Village | : | |
| Prosecution witness | : | PW- 22 | Taluk | : | |
| Name | : | திரு. ராமசந்திரன் | Occupation | : | |
| Father Name | : | திரு. | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 21.7.2025**

A3, 5, 7, 10, 11 absent. U/sec.355 BNSS petition filed and allowed. Others present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் உள்ள இயங்கும் தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.6.2019 அன்று மாவட்ட காவல் அலுவலகத்தில் உள்ள தனிபிரிவு மற்றும் திருவையாறு காவல் வட்ட ஆய்வாளர் ஆகியோரிடமிருந்து கிடைக்கபெற்ற தகவலின் அடிப்படையில் நடுக்காவேரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பனவெளி கிராமத்தில் உள்ள வெட்டாற்று பகுதியினுள் அடையாளம் தெரியாத சுமார் 22 வயது உள்ள கொலைசெய்யபட்டு கிடந்த ஆண் மற்றும் சம்பவ இடத்தை ஆய்வு செய்தேன். அந்த ஆய்வில் கீழ்கண்ட கவனித்தல்கள் கிடைக்கபெற்றன.

1) சம்பவ இடம் பனவெளி வெட்டாற்று பகுதியாகும்.

2) உடலானது சம்பவ இடத்திலிருந்து சுமார் 100 அடி தொலைவில் காணபட்டது.

3) தரைபகுதியில் உடலானது இழுத்து சென்ற அடையாளம் காணபட்டது.

4) இறந்தவருக்கு சுமார் 22 வயது இருக்கலாம்.

5) உடலானது வெட்டாற்றின் தென்கரையில் கருவைமரத்தின் கீழ் காணபட்டது.

6) வாயில் கருப்பு, வெள்ளை கோடுபோட்ட துண்ணடால் கட்டபட்டு காணபட்டது.

7) தலையின் பின்புறம் இடது கன்னம், இடது கை ஆள்காட்டி விரலுக்கு நடுவிலும் இரத்தகாயங்கள் காணபட்டன. இறந்தவர் இரத்தகறை படிந்த கிளி பச்சை நிறத்தில்

சட்டை, கருப்பு கலர் மூண்டா பனியன், கருப்பு கலர் ட்ராயர் போன்ற ஜட்டி, கருப்பு கலர் ஜீன்ஸ் பேண்ட், கருப்பு கலரில் தலஅஜித் என்ற வெள்ளை நிறத்தில் எழுதபட்ட ரிஸ்ட் பேண்ட் வலது கை மணிகட்டில் கட்டியிருந்தார். சிகப்பு கலர் கயிறு வலது கை மணிகட்டில் கட்டியிருந்தார். இடது காதில் கடுக்கன் மற்றும் வலது காலில் கருப்பு நிற கயிறு ஆகியவை அணிந்த நிலையில் காணபட்டார்.

8) தலை தெற்காகவும், கால்கள் வடக்கு நோக்கியும் மால்லார்ந்த நிலையில் உடல் காணபட்டது.

இந்த கவனித்தல்களுக்கு பின் சம்பவ இடத்தில் காணபட்ட இரத்தம் படிந்த மண் மற்றும் இரத்தம் படியாத மண் ஆகியவைகளை சேகரிக்க புலனாய்வு அதிகாரிக்கு ஆலோசனை வழங்கினேன். இந்த தடயங்களுடன் இதர இரத்தம் படிந்த கரைகளுடன் சேர்த்து வட்டார தடய அறிவியல் ஆய்வகம் தஞ்சாவூருக்கு உயிரியல் ஆய்வுக்கு அனுப்ப ஆலோசனை வழங்கினேன். என்னிடம் காண்பிக்கபடும் கருப்பு வெள்ளை துண்டு வாயில் கட்டபட்டிருந்து அது **சா.பொ. 3** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் கிளிபச்சை கலர் சட்டை அவர் போட்டிருந்தது **சா.பொ. 4** ஆகும். கருப்பு கலர் மூண்டா பனியன் அவர் போட்டிருந்தது **சா.பொ. 5** ஆகும். வைக்கிங் என்று எழுதபட்ட கருப்பு கலர் ஜட்டி **சா.பொ. 6** ஆகும். கருப்பு கலர் ஜீன்ஸ்பேண்ட் **சா.பொ. 7** ஆகும். தல அஜித் என்று எழுதபட்ட ரிஸ்ட் பேண்ட் **சா.பொ. 8** ஆகும். சிகப்பு கலர் கயிறு **சா.பொ. 9** ஆகும். கருப்பு கலர் கயிறு **சா.பொ.10** ஆகும். போலிஸார் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

ஆய்வாளர் என்னை விசாரித்தாரா என்றால் விசாரித்தார். என்றைக்கு விசாரித்தார் என்றால் 12.6.2019 அன்றைக்கு விசாரித்தார் நேரம் ஞாபகமில்லை. சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார் என்றால் ஆமாம். அவ்வாறு விசாரித்தபோது மேற்படி நான் சொன்ன இறந்துபோன நபர் போட்டிருந்த உடைகளை கைபற்றாமல் விசாரித்தார் என்றால் ஆமாம். அந்த பொருளை பற்றி என்னிடம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. அந்த பொருட்களை நான் கைபற்றினேனா என்றால் இல்லை, அவற்றை கைபற்ற ஆலோசனை கொடுத்தேனா என்றால் ஆமாம். வயது 22 என்று சொன்னேனே நான் மருத்துவரா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் சொன்னேன் என்றால் உடலை பார்த்த அனுமானத்தின் அடிப்படையில் சொன்னேன். வயதை நான் அவ்வாறு கனிக்க முடியாது என்றால் சரியல்ல. 100அடி தூரம் இழுக்கபட்டிருந்ததாக சொன்னேனே

அளந்து பார்த்தேனா என்றால் சுமாராக சொன்னேன். சுமார் என்றால் 80 அடியோ அல்லது 110 அடியோ இருக்கலாம் என்றால் வாய்ப்பு உள்ளது. இறந்தவர் நான் பார்ப்பதற்கு 5 நாட்களுக்கு முன்பு இறந்திருக்கலாம் என்றால் வாய்ப்பில்லை. மரத்தின் நிழலில் கிடந்தார் என்றால் இல்லை, மரத்து அடியில் கிடந்தார். மேற்படி சான்று பொருட்கள் நான் கைபற்றாததால் என் மூலமாக குறியீடு செய்ய முடியாது என்பதால் சரிதான். இம்மாதிரி வழக்கிற்கு நான் நிறைய சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் ஆமாம். அம்மாதிரி என் மூலமாக சான்று பொருட்கள் குறியாகியுள்ளது என்றால் இல்லை. உறவினர்கள் அவருக்கு தெரிந்தவர்கள் அல்லது பார்த்தவர்களை அல்லது விசாரணை அதிகாரிகள் மூலமாக குறியீடு செய்யவேண்டும் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் அவருடைய அம்மா, அண்ணன் சாட்சியாக விசாரிக்கபட்டுள்ளனர் என்றால் தெரியாது. அதேபோல் புலன் விசாரணை அதிகாரி விசாரிக்கபடவுள்ளார் என்றால் தெரியாது. அதனால் கைபற்றபட்டசான்று பொருட்களுக்கும் எனக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. நான் உடலை பார்த்தபோது கிராம நிர்வாக அலுவலரும் அவரது உதவியாளரும் இருந்தார்களா என்றால் தெரியாது. நான் மட்டு தனியாக போனேனா என்றால் என் குழுவினருடன் போனேன். என் குழுவில் யார்யார் இ'ருந்தார்கள் என்றால் நான், புகைப்பட நிபுணர் மற்றும் எனது ஓட்டுநர். போலிஸார் என்னை விசாரித்தபோது நான் கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை. என் மூலமாக குறியான சான்றுபொருட்கள் எந்த தேதியில் யாரால் கைபற்றியது என்றால் தெரியாது. கைபற்றிய பிறகு என்னை விசாரித்தாரா என்றால் சம்பவ இடத்தில் விசாரித்ததுதான். நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சான்று பொருட்களை என்மூலமாக குறி செய்ய எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. போலிஸார் கேட்டு கொண்டதற்கிணங்க அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.